திரு. எம். ஏ. லத்தீப் : இந்தத் திட்டத்தின் அடிப்படையில் இதுவரை மாநிலத்தில் எத்தனை தொழிற்சாலைகளுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டிருக்கிறது? நிதி உதவியின் அளவு என்ன? மாவட்ட வாரியாக விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லையென்றாலும் ஒரு தகவலைச் சொல்லுகிறேன். தொழில் நுட்ப வல்லுநர்களுக்கு ஒப்பளிப்பு அளித்தது —1977ம் ஆண்டு கிட்டதட்ட 155 பேருக்கு 1 கோடி 41 லட்சம் ரூபாய் கடனாக வழங்கப்பட்டிருக்கிறது. 1978 ஆம் ஆண்டில் 185 பேருக்கு 1 கோடி 76 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. எந்தெந்த மாவட்டம், யார் யார் என்ற விவரங்களுக்குத் தனிக் கேள்வி போட்டால் பதில் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, சட்டமன்ற நிகழ்ச்சி களைப் பற்றிய விமர்சனத்தை 'சட்டமன்றத்தில் இன்று' என்று 'ஆல் இந்தியா ரேடியோ' ஒலிபரப்புகிறது. நேற்றைய தினம் நடந்த நிகழ்ச்சியை விமர்சனம் செய்யும்போது ஒரு சிலரைப் பாதிக்கக் கூடிய அளவுக்கு உண்மையைத் திரித்து, மறைத்து அறிவித்தது உரிமை மீறல் பிரச்சினை என்று அறிவிப்புக் கொடுத் திருக்கிறேன். அது இப்போது எடுத்துக் கொள்ளப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வானொலி நிலையத்திற்கு விளக்கம் கேட்டு எழுதப்பட்டிருக்கிறது. அவர்கள் பதில் வந்த வுடன் அது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. நா. சுந்தரராஜ் : சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்க்க வருகிற விருந்தினர்களுக்கு இன்று பாஸ் வாங்குவது சிரமமாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தினமும் அந்த நிலை ஏற்படுவது இல்லை. சில நாட்கள் ஏற்படும். இன்றைக்கு மட்டும் அந்தச் சிரமம் ஏற்பட்டிருக்கிறது. 235 உறுப்பினர்களிடம் இருந்து மட்டுமல்லாது வெளியே உள்ளவர்களிடம் இருந்தும் பார்வையாளர்கள் மாடத்திற்கு அனுமதி கோரி அதிகமாக

விண்ணப்பம் வந்திருக்கிறது. நானும் அந்தத் தொல்லைக்கு ஆளாகியிருக்கிறேன். இன்று கூட்டம் அதிகமாக இருக்கிறது. எனவேதான் இன்றைக்கு ஒருவருக்கு ஒரு மணி நேரம் என்பதற்குப் பதிலாக அரை மணி நேரம் என்று குறைத்து, அனுமதிச் சீட்டுகள் வழங்க ஏற்பாடு செய்துள்ளேன். எல்லோருக்கும் கிடைக்கும்.

திரு. நா, சுந்தரராஜ் : அதற்கு காரணம் என்ன ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது உங்களுக்குப் புரியவில்லை. இன்றைக்கு முக்கியமான நிகழ்ச்சி என்று பார்வையாளர்கள் கருதுகிறார்கள்.

திரு, செ. சிவசாமி : ஏற்கனவே போட்ட கேள்விகளில் 500 கேள்விகளுக்குப் பதில்கள் தயாராக இருக்கின்றன என்று மதிப்பிற்குரிய தலைவர் அவர்கள் சொன்னார்கள். அந்த 500 கேள்விகளுக்குப் பதில் கொடுக்கும் வகையில் ஒன்றிரண்டு நாட்கள் தனியாகக் கேள்வி பதிலுக்கே ஒதுக்கி கேள்விகளுக்குப் பதில் அளிக்க தலைவர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிப்பட்ட முறை கிடையாது. அவை நடக்கிற வரை கேள்விகள் இணைக்கப்பட்டு பதில் அளிக்கப்படும். மற்ற வினாக்களும் பதில்களும் அச்சிட்டு அனுப்பி வைக்கப்படும்.

3. ஒழுங்குப் பிரச்சனை

ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்வது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பெரியார் மாவட்டம் ஈரோடு பள்ளிப்பாளையம் காகித ஆலைத் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்வதும் உண்ணாவிரதம் இருப்பதும் அதனால் அப்பகுதியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டு கீழ்க்கண்ட மாண்புமிகு உறுப்பினர்கள் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர்:

திரு. க. சுப்பு

திரு. கு. ரமணி

திரு. ரா. வெங்கிடு சாமி வெகிங்டு

திரு. சி. பழனிமுத்து

திரு. மு. அம்பிகாபதி

இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.